1975 அக்டோபர் 24]

ஒட்டியதாகும். நிதிப் பற்றாக்குறை காரணமாக, இப்போதிருக்கிற டிசைன் ரிசர்ச் இன்வெஸ்டிகேஷன் டிபார்ட்மெண்டில் உள்ள அதிகாரிகளைக் கொண்டே பயிற்சி அளிக்க முடியுமாவென்று பார்க்கச் சொல்கிறோம். பயிற்சி அளிக்க முடியுமானால் பயிற்சி அளிக்கப்படும். இவர்களுக்குத் தனியாக பயிற்சி அளிக்கும் எண்ணம் நிதி காரணமாக இப்போதில்லை.

பெருமுளை-தில்லையாடி சாலை

*34 வினா—திரு. எஸ். கணேசன்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாயூரம் வட்டத்திலுள்ள பெருமுளை-தில்லையாடி சாலை பேருந்துகள் செல்வதற்கு இயலாத வகையில் பழுதடைந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) ஆம்.

(இ) மாயூரம் வட்டத்திலுள்ள பெருமுளை-தில்லையாடி-திருக்கடையூர் சாலைகள் புதுப்பிக்கும் பணியினை ரூ. 37,500 மதிப்பீட்டில் "பராமரிப்பு நிதியின்" கீழ் மேற்கொள்ள ஒப்பந்தம் விடப்பட்டு விரைவில் பணி முடிவடையும் நிலையிலுள்ளது. மேலும், இச்சாலை முழுமையும் சரளைக்கற்கள் பரப்பும் பணியினை "பராமரிப்பு நிதியின்கீழ்" மேற்கொள்ளும்படி நாகப்பட்டினம் கோட்டப் பொறியாளர் பணிக்கப்பட்டுள்ளார்.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, இதைப் போலவே மாயூரம் வட்டத்திலுள்ள மாப்படுகை, குறிச்சி போன்ற அரசினர் நெடுஞ்சாலைகள் நெடுஞ்சாலைத் துறையினரிடம், பல முறை குறிப்பிட்டும், பழுது பார்க்கப்படாமல் இருப்பதை, இனியேனும் ஆணையிட்டு சரி செய்ய அதற்கு ஆவன செய்ய அரசு முன்வருமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, தனிக் கேள்வி போடவும்.